**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | செந்தில்குமார் | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**6.2.2024 OS No.8/2020 வா.சா.1 செந்தில்குமார் ஆஜர்**

**முதல் விசாரணை :**

1. நான் இந்த வழக்கின் 2-ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1-ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மானாமதுரை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற மு.வ.எண்.7/2024 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்பாணை வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**2.** எங்கள் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு 28.1.2020ம் தேதியிட்ட நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அஞ்சல் ரசீதுகள் (6 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ரசீதுகள் வா.சா.ஆ.3 வரிசை (6 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 1,6 பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை தாக்கல் செய்கிறேன்.**(அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ.4 வரிசை (2எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 2 முதல் 5 பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த அஞ்சல் உறைகள் தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் உறைகள் வா.சா.ஆ.5 வரிசை (4எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.